
அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது!

ஜனநாயகத்தைக் காப்பவர்கள் தடுப்புக் காவலில்! துரோகச் செயலில் ஈடுபட்டோருக்கு பாதுகாப்பா?

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் கேள்வி!



சென்னை, அக்.12-

அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை நிலவுகிறது. ஜனநாயகத் தைக் காப்பவர்கள் தடுப்புக் காவ லில்! அதற்குத் துரோகம் செய்பவர் கள் பாதுகாப்பில் என கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் சமூக வலைதளப்பதிவில் கூறி யிருப்பதாவது:-

மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கப் போராடியதற்காக முன்னாள் முதலமைச்சர்களான தோழர் பிணராயி விஜயன், அரவிந்த் கேஜ்ரிவால், சகோதரி மமதா பேனர்ஜி, தோழர் மாணிக் சர்க்கார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தேசிய பொதுச் செயலாளர் தோழர் எம்.ஏ. பேபி மற்றும் பல்வேறு மாணவர் அமைப்புகளின் தலை வர்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு தடுப்புக் காவலில் அடைத்துள் ளது. ஆனால், தேசத் துரோகச் செயலுக்காக நீதிமன்ற விசார ணையை எதிர்கொள்ள வேண் டிய தலைமைத் தேர்தல் ஆணை யர் ஞானேஷ் குமார், Z+ பாதுகாப்புடன் சுதந்திரமாக உலா வருகிறார்!

இது எவ்வளவு பெரிய வெட்கக் கேடு!

SIRக்குப் பின்னணியில் உள்ள சதி முழுமையாக அம்பலமாகிவிட் டது. இனியும் அதை மறைக்க முடி யாது! டெல்லியைப் பூட்டி வைப்ப தாலோ, இணையச் சேவையைத் துண்டிப்பதாலோ, அரசியல் தலை வர்களைத் தடுப்புக் காவலில் வைப்பதாலோ இந்திய இளைஞர் களின் எழுச்சியை அடக்க முடி யாது. ஒட்டுமொத்த நாட்டையும் எத்தனை நாள்களுக்குத்தான் ஒன்றிய அரசால் முடக்கி வைத் திருக்க முடியும்?

இதற்கிடையில், தமிழ்நாட்டில் உள்ள மூடர்கூடத் த.வெ.க. அரசு, தனது டெல்லி எஜமானர்களைத் திருப்திப்படுத்தத் துடிக்கிறது. அதற் காக, SIRக்கு எதிராகவும் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரியும் போராடும் செயற்பாட்டாளர் களைத் தடுப்புக் காவலில் வைத் துள்ளது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ள அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். ஞானேஷ் குமார் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும். SIR நிறுத் தப்பட வேண்டும். இந்திய மக்க ளுக்குத் துரோகம் இழைத்த அனைவரும் உரிய விசாரணையை எதிர்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித் துள்ளார்.





மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள் ஐ.பரந்தாமன் மற்றும் எஸ்.சுகன்யா ஆகியோர், கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்று பரப்புரை செய்தமைக்காக நன்றி தெரிவித்தனர். உடன் முன்னாள் அமைச்சர்கள் த.மோ.அன்பரசன், சு.முத்துசாமி, மு.பெ. சாமிநாதன், காஞ்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், கே.இ.பிரகாஷ் எம்.பி., இல.பத்மநாபன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலகக்கோரி

டெல்லியில் பிரம்மாண்ட முற்றுகைப் போராட்டம்! போலீஸ் குவிப்பு! எல்லையில் பதற்றம்!

250 ரயில்கள் ரத்து; 45 மெட்ரோ நிலையங்கள் மூடல்; கரப்பான்பூச்சி ஜனதா கட்சி தலைவர் உட்பட ஆயிரக்கணக்கானோர் கைது!

புதுடெல்லி, அக்.11-

தலைமை தேர்தல் ஆணையருக்கு எதிராக டெல்லியில் நேற்று முன்தினம பிரம்மாண்ட போராட்டம் அறிவிக்கப்பட்டதால் நூற்றுக் கணக்கான ரயில்கள் ரத்து செய்யப்பட்டு நகரம் முழு வதும் பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட் டுள்ளது. மேலும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் நிறுவனர் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதானதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அக்கட்சியின் தலைவரும் விமானத்தில் வைத்தே கைது செய்யப்பட்டார். தமிழகத்திலும் எஸ்.ஐ.ஆரால் 1 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதால் போராட்டம் வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலகிய நிலை!

கடந்த ஜூலை 20ம் தேதி வினாத்தாள் கசிவு விவகாரத்தில் வெடித்த பெரும் போராட்டத்தின் எதிரொலியாக ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக நேரிட்டது. அப்போது நடந்த தடியடி சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன. அந்த கசப் பான சம்பவங்களின் தாக்கம் இன்னும் நீங்காத நிலையில், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக டெல்லியின் மையப்பகுதியான ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் நேற்று பிரம்மாண்ட போராட்டம் நடத்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்திற்கு டெல்லி போலீசார் அனுமதி அளிக்க மறுத்துவிட்ட நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக நேற்று முன்தினம் இரவு மட்டும் 100 பழைய குற்றவா ளிகள், போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த கட்சிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதி கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

அரியானாவின் குருகிராம் பகுதியில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்த பிரபல யூடியூபர் துருவ் ரதியும் கைது செய்யப் பட்டார். மேலும் வெளிமாநிலங்களில் இருந்து டெல்லிக்கு வரவிருந்த 250க்கும் மேற்பட்ட ரயில்கள் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ராஜீவ் சவுக், புதுடெல்லி, மத் திய செயலகம், படேல் சவுக், காஷ்மீரி கேட் உள்ளிட்ட 45 மெட்ரோ ரயில் நிலையங்களின் வாயில்கள் முழுமையாக அடைக்கப்பட்டு தலைநகரமே முடங்கியுள்ளது.

டெல்லி எல்லையில் 35 ஆயிரம் போலீசார் குவிப்பு!

சட்டம் ஒழுங்கை பராமரிக்க ஒன்றிய அரசின் ஆயுதப் படை மற்றும் போலீசார் என 35,000க்கும் மேற்பட்ட பாது காப்புபடையினர் டெல்லி எல்லைகளில் குவிக்கப்பட்டுள்ளனர். ஜன்பத் கர்த்தவ்ய பாதை சந்திப்பில் இருந்து 4 கிலோமீட்டர் சுற்றள வுக்கு நேற்று இரவு 10 மணி முதல் 24 மணி நேரத் திற்கு இணையதள சேவை முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது.

போராட்டக் களமாக அறிவிக்கப்பட்ட ஜந்தர் மந்தர் பகுதி யில் 7 அடுக்கு இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டு வெல்டிங் செய்யப்பட்டுள்ளன. மேலும் 300 சிசிடிவி கேமராக்கள் மூலம் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. இந்த கெடுபிடி களுக்கு மத்தி யிலும் போராட்டம் நடைபெறும் என அறிவித்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் நிறுவனர் அபிஜீத் தீப்கே, 'போராட்டத்தால் மக்களுக்கு சிரமம் ஏற்படும் என்று கூறும் அதிகாரிகள், மெட்ரோ மற்றும் ரயில்களை ரத்து செய்து சாலை களை முடக்குவது பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாதா?' என்று ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார்.

போலீஸ் அதிகாரிகளுக்கு பிரத்யேக கேமராக்கள்!

போலீசாரின் நடவடிக்கையால், பொதுமக்கள் கடும் சிரமத் துக்குள்ளாகியுள்ளனர். அதேநேரத்தில், முந்தைய போராட் டங்களின் போது பெண் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மற்றும் பாலியல் சீண்டல் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டு களை மனதில் கொண்டு, போலீசார் இம்முறை மிகுந்த கவ னத்துடன் செயல்பட்டு வருகின்றனர். களத்தில் நிற்கும் போலீஸ் அதிகாரிகளுக்கு பிரத்யேக கேமராக்கள் வழங்கப் பட்டு, அனைத்து நடவடிக்கைகளும் வீடியோ மூலம் ஆதா ரப்பூர்வமாக பதிவு செய்யப்படுகின்றன.

டெல்லி எல்லைக்குள் சந்தேகத்திற்குரிய நபர்கள் நுழை வதைத் தடுக்க தீவிர தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகி றது. தேவையற்ற மோதல்களைத் தவிர்த்து அமைதிக்கு ஒத்துழைக்குமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத் துள்ள போலீசார், தடையை மீறி வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை பாயும் என எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில், மும்பையில் இருந்து விமானம் மூலம் டெல்லி வந்து இறங்கிய கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் முக் கிய தலைவர்களான அபிஜீத் தீப்கே, சவுரவ் தாஸ் மற்றும் அசுதோஷ் ரான்கா ஆகியோரை விமான நிலையத்திலேயே போலீசார் கைது செய்தனர்.

இதற்கிடையே, தவுலா குவான் உள்ளிட்ட எல்லைகளில் தீவிர வாகன சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, மத்திய டெல்லி முழுவதும் ஆயிரக்கணக்கான போலீசார் மற்றும் துணை ராணுவப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, டெல்லி நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டதால் பதற்றம் அதிகரித் துள்ளது.

அதையும் மீறி பலர் டெல்லியில் குவிந்து வருவதாக கூறப் படுகிறது. அதேநேரத்தில் கரப்பான் பூச்சி கட்சிக்கு ஆதரவாக நாடு முழுவதும் போராட்டம் நேற்று நடைபெற்றுள்ளது. இத னால் நாடு முழுவதும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டுள்ளது. தமிழகத்திலும் எஸ்.ஐ.ஆர். பாதிப்பால் 1 கோடி வாக்காளர்கள் நீக்கப்ப ட்டுள்ளதால் போராட்டம் வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

போராட்டக்காரர்களை துணை ராணுவப் படை கொண்டு அடக்குமுறையில் ஈடுபட்ட ஒன்றிய பா.ஜ.க. அரசை பல்வேறு கட்சித் தலைவர்கள் கடுமையாக கண்டித்துள்ளனர்.

சென்னையில் நடந்த போராட்டம்! போலீஸ் அராஜகம்!

தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரி பெசன்ட்நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய சி.ஜே.பி. ஆதரவாளர் கள் உள்ளிட்ட 40 பேர் கைது செய்யப்பட்டனர். போலீஸ் வேனில் ஏற்றுவதற்கு குண்டுக் கட்டாக தூக்கியும், தரதர வென இழுத்தும் சென்றதால் பரபரப்பு நிலவியது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தேர்தல் ஆணை யத்தின் செயல்பாடுகள் தொடர்பான விவகாரங்களை மைய மாகக் கொண்டு தேசிய அளவில் பெரும் அரசியல் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உடனடியாக பதவி விலகக் கோரி பல்வேறு அமைப்புகளும் கட்சிகளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

டெல்லி போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், தேர்தல் ஆணையரின் நடவடிக்கைகளை கண்டித்தும் சென் னையின் முக்கிய பகுதியான பெசன்ட் நகரில் இளைஞர்கள் திரண்டு திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள், 'இந்தியா முழுவதும் 13 கோடி வாக் காளர்கள் வேண்டுமென்றே தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள னர். இதற்கு காரணமான தலைமைத் தேர்தல் ஆணையர் உடனடியாக பதவி விலக வேண்டும். எஸ்.ஐ.ஆரை ரத்து செய்ய வேண்டும்' என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலி யுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். இந்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி நின்றனர்.

தகவலறிந்து அடையாறு போலீஸ் துணை கமிஷனர் பத்ரிநாராயணன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, இங்கு ஆர்ப்பாட்டம் நடத்த யாருக்கும் அனுமதி வழங்கவில்லை. ஆர்ப்பாட்டம் நடத்துவதால் கடற் கரைக்கு வருபவர்களுக்கு இடையூறு ஏற்படும். இதனால் மனு கொடுத்து அனுமதி பெற்று ஆர்ப்பாட்டம் நடத்துங்கள். தற்போது அனைவரும் கலைந்து செல்லுங்கள்' என்றனர்.

ஆனாலும் அவர்கள் கலைந்து செல்லாமல் போலீசாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து போலீசார், குண் டுக்கட்டாக தூக்கியும், தரதரவென இழுத்துச் சென்றும் கைது செய்து வேனில் ஏற்றி பெசன்ட்நகர் ஊரூர் குப்பம் மாநகராட்சி சமுதாய நலக் கூடத்தில் வைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டவர்களை போலீசார் வலுக்கட்டாயமாக கைது செய்த சம்ப வம் பெசன்ட்நகரில் பரபரப்பை ஏற்படுத்தியது.